2nd November 1966]

திரு. வை. சங்கரன்: இதை ஏற்றுக்கொள்வதற்கு மத்திய அரசாங்கம் ஏதாவது நிதி உதவி அளித்திருக்கிருர்களா? அதோடு சேர்த்து இந்த ஸ்கீமுக்காக நம்முடைய அரசாங்கம் ஆண்டு தோறும் எவ்வளவு செலவழிப்பதற்கு உத்தேசித்திருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்தத் திட்டத்திற்காக எவ்வளவு செலவாகிறது என்ற புள்ளிவிவரம் என்னிடம் இல்லே. இதற்காக அதிகச் செலவு ஒன்றுமில்லே. மத்திய அரசாங்கம் இதைப்பற்றித் தெரிவித்தது. நல்ல திட்டமாக இருக்கிறது என்று இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்தப் பயிற்சித் திட்டம் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் அத்தனை பேர்களுக்கும் கட்டாயமாகச் சொல்லிக் கொடுக்கப்படுகிறதா? அல்லது குறிப்பிட்ட மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு மட்டும் சொல்லிக்கொடுக்கப்படுகிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: குறிப்பிட்ட மாணவர்களுக்கு மட்டும் இந்தப் பயிற்சி கொடுப்பது என்பதில்லே. சாதாரணமாக எல்லா மாணவர்களுக்கும் இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

உயர்நிலைப்பள்ளிகள் பற்றிய சர்வே குறிப்புகள்

*302 **கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து:** கனம் முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னிந்திய ஆசிரியர் யூனியன், ஹைஸ்கூல்களைப்பற்றி நடத்திய சர்வே குறிப்புகள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டனவா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

(உ) அதன் மீது சர்க்கார் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*) The Government are aware that the South Indian Teachers' Union Council of Educational Research has conducted among other things a survey of School Library Service and a survey of the Workload of Teachers in Secondary Schools;

(*c*) The reports were perused with interest.

திரு. து. ப. அழகமுத்து: அதிலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: முதல் சர்வேயின் நோக்கம்.

(1) To ascertain the nature and extent of library service facilities available at present in Secondary Schools;

(2) To determine the facilities the Schools should have for effective service; and

(3) To indicate the ways and means of improving the existing services within a reasonable period.

இதுதான் ஆப்ஜெக்ட். இதை வைத்துக்கொண்டு அவர்கள் சர்வே செய்து சில விவரங்கள் கொடுத்திருக்கிறார்கள். இந்த விவரங்கள் உபயோககரமாகத்தான் இருக்கின்றன. அவற்றை அரசாங்கம் கவனித்துக்கொண்டு வருகிறது.

காட்டூர் கொத்தமங்கலம் ஆரம்பப்பள்ளி

*303 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம், காட்டூர் கொத்தமங்கலம் இந்து அரசினர் உதவிபெறும் ஆரம்பப் பள்ளியில், ஆரம்பத் தேதியிலிருந்து இதுவரை எத்தனை தாழ்த்தப்பட்ட மாணவர்கள் சேர்க்கப்பட்டார்கள், ஆண்டுவாரியாக?

(இ) இல்லை என்றால், காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) அரசாங்க மானியம் பெறும் காட்டூர் கொத்தமங்கலம் இந்துத் தொடக்கப் பள்ளியில் இதுவரை அரிஜன மாணவர் எவரும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை;

(இ) இப்பள்ளியில் அரிஜன மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு எத்தகைய மறுப்போ தடையோ இல்லை. எனினும் அரிஜன மாணவர் எவரும் இப்பள்ளியில் சேரத் தமது மனுவை பள்ளி நிர்வாகிக்கு அனுப்பவில்லை. அரிஜன மாணவர் அனைவரும் இக்கிராமத்தில் உள்ள பஞ்சாயத்து யூனியன் தொடக்கப்பள்ளியில் கல்வி பயிலுகின்றனர்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, நமது முதல் அமைச்சர் அவர்கள் இதுவரைக்கும் எந்த அரிசன மாணவரும் அந்தப் பள்ளியில் சேருவதற்கு மனுச் செய்துகொள்ளவில்லை என்று சொல்கிறார்கள். அந்த ஊரிலுள்ள ஒரு அரிசன போஸ்ட் மாஸ்டருடைய பிள்ளையை அந்தப் பள்ளியில் சேர்த்துக் கொள்வதற்காக எவ்வளவு தகராறு நடந்தது என்பது நேரிடையாகப் பார்த்தவர்களுக்குத் தெரியும். அதை ஏன் மூடி மறைக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் மூடி மறைப்பதாகக் கனம் அங்கத்தினர் நினைப்பது முற்றிலும் தவறு. என்னிடம் இருக்கிற தகவலை வைத்துக்கொண்டுதான் நான் சொல்கிறேன். இந்தப் பள்ளி நிர்வாகி அரிசன மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறார் என்பது தான் என்னிடத்தில் இருக்கிற தகவல். இதுவரையில் அரிசன மாணவர் ஒருவரும் சேர்த்துக்கொள்ளப்படவில்லை என்பதுதான் என்னிடம் உள்ள தகவல். அங்கு இருக்கிற அரிசனப் பிள்ளைகள் மற்றொரு பள்ளியில் படிக்கிறார்கள் என்பதுதான் என்னிடம் உள்ள